# குடல் பாதிக்கப்பட்ட லண்டன் பெண்ணுக்கு சிக்கலான அறுவை சிகிச்சை

## சென்னை மியாட் மருத்துவமனை சாதனை

சென்னை

குடல் பாதிப்பால் அவதிப்பட்டு வந்த இங்கிலாந்து பெண்ணுக்கு சென்னை மியாட் மருத்துவமனையில் சிக்கலான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, பாதிக்கப்பட்ட குடல் பகுதி 2 அடி நீளத்துக்கு வெட்டி அகற்றி பின்னர் இணைக்கப்பட்டது.

இதுதொடர்பாக மியாட் மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இங்கிலாந்தின் லண்டன் நகரை சேர்ந்த ஜாஸ்பிர் கவுர் சாஹல் (51) என்ற பெண் குடல் அடைப்பு மற்றும் அடிவயிற்று வலியால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சைக்காக கடந்த ஜூன் 18-ம் தேதி மியாட் மருத்துவமனைக்கு வந்தார். முதுகுத் தண்டை பாதிக்கச் செய்யும் பிரச்சினையால் நீண்ட காலம் அவதிப்பட்டுவந்த அவர் NSAID மருந்தை பயன்படுத்தி வந்துள்ளார்.

இதன் காரணமாக ஏற்பட்ட பக்கவிளைவால் உதரவிதான பாதிப்பு ஏற்பட்டது. எனவே, குடல் அடைப்பைத் தவிர்க்கும் வகையில் பல மாதங்கள் திரவ உணவு, குறைவான நார்ச்சத்து உள்ள உணவுகளையே சாப்பிட்டு வந்தார்.

மருத்துவப் பரிசோதனையில் சேய்மை கடைச்சிறுகுடலில் பல்குழல் சுருக்கங்கள் ஏற்பட்டிருப்பது தெரியவந்தது.

அதை உறுதிசெய்துகொள்வதற்காக அவருக்கு டபுள் பலூன் என்டரோஸ்கோபி செயல்முறை மேற்கொள்ளப்பட்டது. இதில் அதிக அனுபவம் வாய்ந்த மருத்துவர் அருள் பிரகாஷ், பெருங்குடல் வழியாக நார்க்குடல், பின்சிறுகுடல் சந்திப்பைக் கடந்து சிறு குடலில் இந்த சிக்கலான செயல்முறையை மேற்கொண்டார்.

இதில், குழல் சுருக்கங்கள் இருப்பது உறுதிசெய்யப்பட்டது. புண்கள், வீக்கம் இருப்பது நுண்திசு நோய்க்கூறியல் ஆய்வில் தெரியவந்தது.

அறுவை சிகிச்சையின்போது, பாதிக்கப்பட்ட பகுதியில் உள்நோக்கியை செலுத்தி மருத்துவர் அருள் பிரகாஷ் உதவி செய்ய, சிறு குடலில் 2 அடி நீளத்துக்கு சிதைவுகளும் சவ்வு போன்ற 9 குழல் சுருக்கங்களும் காணப்பட்டன. பாதிக்கப்பட்டிருந்த 2 அடி நீளக் குடல் பகுதியை பேராசிரியர் பாஸ்கரன் வெட்டி அகற்றிய பிறகு, மற்ற பகுதியை குடலில் இணைத்தார்.

இந்த சிகிச்சையைத் தொடர்ந்து, ஏறக்குறைய 3 ஆண்டுகளுக்குப் பிறகு, இங்கிலாந்துப் பெண் ஜாஸ்பிர் முழுமையாக உணவு உட்கொண்டார். விரைவில் அவர் டிஸ்சார்ஜ் செய்யப்படுகிறார். சிக்கலான வழிமுறையைப் பின்பற்றி சிகிச்சை அளிக்கப்பட்டது நாட்டிலேயே இது முதல் முறை.

இவ்வாறு மியாட் மருத்துவமனை அறிக்கை தெரிவிக்கிறது.